25th March 1969]

மதுரை மாவட்ட நாகணம்பட்டிக்கு அந்த லாரி கொண்டு சென்றது. அந்த லாரியின் சரியான பதிவு எண் எம்.டி.எ. 1716, கள்ளக் கடத்தல் செய்வதற்கென அந்த லாரியின் எண் தட்டு எம்.டி.எ. 716 என மாற்றப் பட்டிருந்தது.

(இ) ஆம்.

(உ) எற்கனவே இந்த லாரியின் சொந்தக்காரரான திரு. சங்கர் என்பவர் மீது திருச்சி மாவட்ட மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்கு விசாரணை யில் இருந்து வருகிறது. நாகணம்பட்டிக்கு நெல்லைக் கடத்தல் செய்த குற்றத்திற்காக மூன்று பேர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் பட்டது. உளுந்தூர்ப்பேட்டை உட்கோட்ட நீதிபதி லாரி இயக்குநர் திரு அய்யப்பன் என்பவருக்கு 8 மாத கடுங்காவல் தண்டனை விதித்தார். மற்றவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

Supply of rice

* 201 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state the reason for the reduction in the supply of rice from 51 quintals to 20 quintals in the month of August 1968 to the Pasumlai Mahalakshmi Mill Workers' Co-operative Stores, Madurai?

அரிசி விநியோகம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

மதுரை பசுமலை மகாலட்சுமி மில் தொழிலாளர் கூட்டுறவு பண்டக சாலைக்கு மாதம் 51 குண்டால் அரிசி கொடுத்து வந்ததை 1968 ஆகஸ்டு மாதம், 20 குவிண்டாலாகக் குறைத்ததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : சட்டபூர்வமான உணவுப் பங்கீடு அமுலில் உள்ள இடங்களில், மக்களுக்கு உணவு தானியங்கள் வழங்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுள்ளது. குடும்ப கார்டு அமுலில் இருக்கும் இடங்களில் தனியார் வியாபாரத்திற்கு எவ்விதத் தடையும் இல்லை. குடும்ப கார்டு உள்ள இடங்களில் உள்ளவர்கள் வெளிச் சந்தையில் உணவு தானியங்களை வாங்கி உபயோகிக்க எவ்விதத் தடையும் இல்லை. ஆகவே, அந்த இடங்களில், அறுவடை உள்ளபோதும், உணவு தானியங்கள் வெளிச் சந்தையில் தாராளமாகக் கிடைக்கும்போதும், அதற்குத் தகுந்தாற்போல வும், அரசாங்கத்தின் கையிருப்பை ஒட்டியும் மக்களுக்கு வழங்கும் உணவுப் பொருள்களின் அளவு மாற்றப்படுகிறது. குடும்பக் கார்டு அமு லில் உள்ள இடங்களில், அறுவடை நடைபெறுகின்றதா என்பதையும், வெளிச் சந்தையில் உணவு தானியங்கள் கிடைக்கின்றதா என்பதையும் அரசாங்கத்தின் கையிருப்பு முதலியவைகளைப் பொறுத்தும் தானி யங்களின் அளவைக் கூட்டியோ, குறைத்தோ வழங்கும் பொறுப்பு மாவட்ட ஆட்சியாளருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதை ஒட்டி சில சம யங்களில் உணவு வினியோகத்தின் அளவு சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் மாற்றப்பட்டிருக்கலாம்.

Usumba Paddy

* 202 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(*a*) whether the 'Usumba' paddy was considered as second rate and the price was fixed accordingly, during the procurement in Madurai district last year; and

[25th March 1969

(b) whether the same paddy was considered as third rate during September 1968; and

(c) if so, the reason therefor?

உசும்பா நெல்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுரை மாவட்டத்தில் சென்ற ஆண்டு கொள்முதலின்பொழுது "உசும்பா" என்னும் நெல் இரண்டாம் தர நெல்லாக விலை நிர்ணயம் செய்யப்பட்டதா ?

(இ) 1968 செப்டம்பரில் இதே நெல் மூன்றாந்தர நெல்லாக நிர்ணயம் செய்யப்பட்டதா ?

(உ) ஆமெனில், இதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) 1967-ம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் உசும்பா என்னும் நெல் இரண்டாம் தரமாகக் கருதி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 45 வீதம் கொள்முதல் விலை கொடுக்கப்பட்டது.

(இ) ஆம்.

(உ) 1968-ம் ஆண்டு முதலில் உணவு மண்டலக் கிடங்கு அலுவலர் தஞ்சாவூர், அவர்களின் குறிப்பிற்கு ஏற்ப உசும்பா நெல்லுக்கு மூன்றாந் தர நெல்லாக விலை கொடுக்கப்பட்டது. ஆனால், அதன் பின் அரசினரின் 7-11-1968 குறிப்பாணையின் படி 1968-ம் ஆண்டில் அறுவடையான உசும்பா நெல்லுக்கு இரண்டாம் விலையான ரூ. 45 கொடுக்கப்படுகிறது.

MR. CHAIRMAN : Questions are over.

Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member).

II.—ANNOUNCEMENTS.

Messages from the Assembly.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 8 of 1969) as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.

I have also received a message from the Hon. Speaker, Legislative Assembly, intimating that the amendments made by the Legislative Council in the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 (L.A. Bill No. 18 of 1968) were taken into consideration by the Assembly at its meeting held on the 22nd March 1969 and that the Assembly has disagreed to the amendments made by the Council and sent the Bill, as passed by the Assembly.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS